# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH

O.S.No.58/2021

Deposition of witness for PW4

| | | |
|---|---|---|
| Name | : | சுபசேகர் |
| Father's Name | : | சங்கர நாராயணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.06.2026.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஆவேன். நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் Disputed area வை அடையாளப்படுத்தி காட்டவில்லை என்றால் வாதியின் இடமானது சர்வே எண்.9A3 ல் இடம் பெற்றுள்ளது, பிரதிவாதியின் இடமானது 9A2 ல் இடம்பெற்றுள்ளது. இரண்டுக்கும் இடையிலான பகுதியை AJB என்று காண்பித்துள்ளேன். AJ 4.6 மீட்டர், BJ 1 அடி1 இஞ்ச் அளவும் காண்பித்துள்ளேன். Disputed area என்பது BJ ஆகும். (வாதி தரப்பு வழக்கறிஞர் சாட்சி தனக்கு அனுகூலமாக சாட்சி அளிக்கவில்லை என்றும், விரோதமாக சாட்சியம் அளித்ததாகவும், அவரை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரினார். எனவே இந்திய விசாரணைமுறைச்சட்டம் பிரிவு 154 ன் கீழ் இந்நீதிமன்றம் சாட்சியை வாதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதித்தது)

**குறுக்குவிசாரணை (வாதி தரப்பில்)**

1. நான் அடையாளம் காட்டியபகுதி வழக்கு தாவா இல்லை என்றால் சரியல்ல, இடத்தை அளக்க நிலஅளவையர் தான் பாயிண்டுகளை fix செய்தார். படிப்பகுதியில் தான் ஆக்கிரமிப்பு உள்ளது என்றால், தாவா இடத்தில் படிகளே இல்லை. இருதரப்பினருமே படி உள்ளது என்பதை உறுதிகூறியே வழக்கு நடத்திவருகிறார் என்றால் சரியல்ல. அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த அறிக்கையை மேலோட்டமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. நான் அடையாளம் காட்டப்பட்ட பகுதியில் இருதரப்பினருக்கும் தாவா கிடையாது என்றால் சரியல்ல. நான் அடையாளம் காட்டிய பகுதி காலிஇடம் என்றால் சரிதான். எனது அறிக்கையில் தெளிவாக Disputed area குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. இந்த அறிக்கை வழக்கிற்கு தொடர்பற்றது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

1. நான் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கை என்பது நிலஅளவையர் உதவியுடன் இடத்தை அடையாளம் காட்டியதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யும் சமயத்தில் அதற்குரிய புகைப்படங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. வாதிகள் தாவா செய்யும் சுவர் மற்றும் படிக்கட்டு பகுதி பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.9A2 க்குள் தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். A விலிருந்து J வரை 4.6 மீட்டரும்

அதில் BJ 1 அடி 1 இஞ்ச்–ம் என ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1 அடி 1 இஞ்ச் என்பது சர்வே எண்.9A2 க்குள் உள்ளது என்றால் சரிதான்.

3. வாதிகள் சொல்வதுபோல் படிக்கட்டு பகுதிகளோ, சுவர் பகுதிகளோ சர்வே எண்.9A3 ல் அமைந்திருப்பதாக துலங்குகிறது என்றால் எனக்கு ஸ்தல பார்வையின்போது துலங்கவில்லை. பிரதிவாதியின் தென்பக்க சுவரும், படிக்கட்டுகளும் வெளிப்பக்கம் பூசாமல்தான் ஸ்தல பார்வையில் எனக்கு தெரிந்தது என்றால் சரிதான்.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**